மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண்.70/2025
(CNR No: TNTP01-001951-2025)

V.M.S.V. போஸ்,
த/பெ. V.M.S.வேலுச்சாமி,
கதவு எண்.2/2,
ஸ்ரீபாலம்மாள் நகர்,
திண்டுக்கல் ரோடு,
மணப்பாறை டவுன்,
திருச்சி மாவட்டம். ... மேல்முறையீட்டாளர்/
1ம் பிரதிவாதி

// எதிர் //

1) அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோவில்,
மணப்பாறை,
அதன் சார்பாக.
அதன் செயல் அலுவலர்,
அருள்மிகு நல்லாண்டவர் கோவில்,
மணப்பாறை டவுன்,
திருச்சி மாவட்டம். ... 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்
/வாதி

2) தமிழ்நாடு அரசு,
அதன் சார்பில்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சி–1.

3. வருவாய் கோட்டாட்சியர்,
கலெக்டர் ஆபிஸ் ரோடு,
திருச்சி –1.

4. வட்டாட்சியர்,
மணப்பாறை. ... 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள்
/ 2 முதல் 4 பிரதிவாதிகள்

மணப்பாறை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.158/2021–ல் 27.01.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு.

இடையே

அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோவில்,
அதன் சார்பில் அதன் செயல் அலுவலர்,
அருள்மிகு நல்லாண்டவர் கோவில்,
மணப்பாறை டவுன்,
திருச்சி மாவட்டம். ... வாதி

//எதிர்//

1. V.M.S.V. போஸ்,
த/பெ. V.M.S.வேலுச்சாமி,
கதவு எண்.2/2, ஸ்ரீபாலம்மாள் நகர்,
திண்டுக்கல் ரோடு,
மணப்பாறை டவுன்,
திருச்சி மாவட்டம்.

2. தமிழ்நாடு அரசு,
அதன் சார்பாக
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சி –1.

3. வருவாய் கோட்டாட்சியர்,
கலெக்டர் ஆபிஸ் ரோடு,
திருச்சி–1.

4. வட்டாட்சியர்,
மணப்பாறை ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு இந்நீதிமன்றம் முன்பாக 15.06.2026 இறுதி விசாரணைக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில், வழக்கறிஞர் திரு. K.பிரபாகர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமமூர்த்தி

அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், வழக்கினை நடத்த, மேல்முறையீட்டுக் காரணக்குறிப்பு, விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை, தீர்ப்பாணை, வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களையும் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

தீர்ப்புரை

1.1) மணப்பாறை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.158/2021ல் 27.01.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கெதிராக, இம்மேல்முறையீடு அசல் வழக்கின் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) அசல் வழக்கானது, தாவா சொத்து வாதி திருவுருவுக்கு பூரணமாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக, தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆர்ஜிதம் செய்ததில், அதற்காக தமிழக அரசால் கொடுக்கப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையை, ம் பிரதிவாதிபெறுவதை தடை செய்து, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், செலவுத் தொகை கிடைக்கவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>விசாரணை நீதிமன்றத்தில் வாதி/திருவுரு(Idol) தாக்கல் செய்த அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்:</u>

2.1) மணப்பாறையிலுள்ள ஸ்ரீஅகஸ்தீஸ்வரர் கோவில் நல்லாண்டவர் கோவில் நிர்வாக அதிகாரியின் கீழ் உள்ளது. இந்த கோவில் நல்லாண்டவர் கோவிலின் துணைக் கோவிலின் ஒன்றாகும். தாவாசொத்து, வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். வருவாய் ஆவணங்களில் தாவாசொத்து வாதி கோவிலின் பெயரில் உள்ளது. டவுன் சர்வே ரிஜிஸ்டரில் தாவா சொத்து வாதியின் பெயரில் உள்ளது. 1ம் பிரதிவாதி திருச்சிராப்பள்ளி, கோட்டாட்சியர் முன்பாக தாவாசொத்தினை தன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக் கேட்டு மனு செய்துள்ளார். அதன்பேரில், கடந்த 28.09.2012ம் தேதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கோட்டாட்சியர், 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றம் ஏற்படுத்த உத்தரவிட்டார். மேற்படி உத்தரவின்பேரில், திருக்கோவில் நிர்வாகம் திருச்சிராப்பள்ளி, மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி மேல்முறையீட்டை திருச்சிராப்பள்ளி கோட்ட வருவாய் அலுவலர் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

2.2) இந்நிலையில், தாவா சொத்தின் ஒரு பகுதி 559 சதுர மீட்டர் இடத்தை தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆர்ஜிதம் செய்தது. அதிகாரம் பெற்ற அலுவலர் முன்பாக, 1ம் பிரதிவாதி, தாவா சொத்து தனக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு, மணப்பாறை, உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்

வழக்கு எண்.244/2010 என திருக்கோவில் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறி ஆட்சேபணை செய்தார். அதன்பேரில், திருச்சி, கோட்டாட்சியர் கடந்த 01.10.2010ம் தேதியன்று நில ஈட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிட்டார். 1ம் பிரதிவாதியால் போடப்பட்ட வழக்கு எண்.244/2010 வழக்கு நிலுவையில் இருந்தபோது, பிரதிவாதி தனக்கு கோட்டாட்சியர் முன்பாக சாதகமான உத்தரவு வந்துள்ளது என்று கூறி, உரிமையியல் வழக்கை மேல் நடத்தாமல் தள்ளுபடியாக விட்டுவிட்டார். 1ம் பிரதிவாதி விளம்புகை வழக்கினை மேல் நடத்தாமல் விட்டுவிட்டதால், வாதி கோவில் சார்பாக விளம்புகை பரிகாரம் கேட்டு, மணப்பாறை, உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.267/2012 என்ற எண்ணில் தாவா தாக்கல் செய்து மேற்படி வழக்கு தற்போது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

2.3) தாவாசொத்து, வாதி கோவிலுக்கு மானியமாக வழங்கப்பட்டு, T.D.No.2030 என்று இனாம் தூய பதிவேட்டில் உள்ளது. 1ம் பிரதிவாதி தனது முன்னோர்கள் தாவா சொத்தை வாங்கியதாகவும், தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் தீர்வு அதிகாரிகளால் பட்டா வழங்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். மூன்றாம் தரப்பினரால் தாவா சொத்தை விற்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகளின் முடிவு உரிமையியல் நீதிமன்றத்திற்கு கட்டுப்படாது என்றும், உரிமையை பற்றி உரிமையியல் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. எனவே, தாவாசொத்து

வாதிக்கு பூரணமாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக, 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆர்ஜிதம் செய்ததில் அதற்காக கொடுக்கப்படும் நஷ்ட ஈட்டு தொகையை பெறுவதை தடை செய்து உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், செலவுத் தொகை கிடைக்கவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

3.1) தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறாகும். தாவா சொத்து வாதி கோவிலுக்குச் சொந்தமானது அல்ல. தாவாசொத்து தவறுதலாக நகர அளவை செய்தபொழுது, தாவாக்கோயிலின் பெயரில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, நகர அளவையின்போது, ஏற்பட்ட தவறின் காரணமாக நகர அளவை பதிவேடுகளில் வாதி கோயிலின் பெயர் குறிப்பிடப்பட்டது. இதனையறிந்த 1ம் பிரதிவாதி, வாதி கோயிலின் பெயர் நகர அளவைப் பதிவேடுகளில் பதிவு செய்துள்ளதை நீக்கம் செய்து, தன் பெயரில் தாவாசொத்தை வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று திருச்சிராப்பள்ளி, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு தாக்கல் செய்தார்.

3.2) அந்த மனுவை விசாரித்த வருவாய் கோட்டாட்சியர், தாவா இடம் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், 1ம் பிரதிவாதி மற்றும் வாதி கோயிலின்

சார்பாக நிர்வாக அலுவலர் ஆகியோர்களை விசாரித்து, அவர்களிடம் உள்ள ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்து, தாவா சொத்தைப் பொருத்து இந்து அறநிலையத்துறையில் உள்ள கோயில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பற்றிய ஆவணங்களில் எவ்வித குறிப்பும் இல்லையென்று வாதி கோயிலின் நிர்வாக அலுவலர் நேரில் ஆஜராகி சாட்சியம் அளித்ததையும், எவ்வித ஆவணங்களையும் முன்னிலைபடுத்தாததையும் ஆய்வு செய்து, வருவாய் கோட்டாட்சியர் வாதி கோயிலின் பெயரில் தவறுதலாக நகர அளவையின்போது, தாவா சொத்தை குறிப்பிட்டுள்ளதை ரத்து செய்து, 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை பட்டா பெயர் மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆகவே, 28.09.2012ம் தேதி வருவாய் கோட்டாட்சியரால் 1ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்தை பொருத்து பட்டா மாற்றம் செய்து பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதாகும். வாதி வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் மீது திருச்சி, மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு மேல்முறையீடு செய்யப்பட்டு, அந்த மேல்முறையீட்டிலும் வாதியால் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

3.3) மேலும், மாவட்ட வருவாய் அலுவலர், மேல்முறையீட்டு மனுவிலும், சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், 1ம் பிரதிவாதி மற்றும் வாதி கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோர்களை முறையாக விசாரணை செய்து, எவ்வித உத்தரவு இன்னும் பிறப்பிக்காத நிலையில், வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு

எவ்வித உரிமையும் இல்லை. தாவா சொத்தில் 559 சதுர மீட்டர் தேசிய நெடுஞ்சாலைதுறையால் கையகப்படுத்தப்பட்டது என்பது உண்மை. 1ம் பிரதிவாதியால் வருவாய் கோட்டாட்சியர் முன்பு தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாததால் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த தாவா அ.வ.எண்.244/2010 ஐ மேல் நடத்தவில்லை. சட்டப்படி ஒரு பொருள் குறித்து இரண்டு இடங்களில் விசாரணை செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. தாவா நிலம் வாதி கோயில் பெயரில் இனாமாக கொடுக்கப்பட்டு, அது T.D.No.2030 ல் பதியப்பட்டுள்ளது என்றால் தவறாகும். T.D.No.2030–ல் தாவா சொத்தைப் பற்றிய விபரம் இல்லை என்று நில உடமை வட்டாட்சியர் முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்கள்: 1347/68, 1308/68, 1303/68 மற்றும் 1314/68 எண்களில் செய்த விசாரணையில் தெளிவாக குறிப்பிட்டு, தாவா நிலம் பிரதிவாதியின் தந்தை வேலுச்சாமி நாடார் பெயரில் பட்டா வழங்கலாம் என்றும், தாவா சொத்தும், இன்னும் பிற சொத்துக்களும் வாதி கோவிலுக்குச் சொந்தமானது இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தாவாசொத்து வாதி கோலிலுக்குச் சொந்தமானது இல்லை. தாவா சொத்து தனி நபர்களுக்கு சொந்தமாக 1891ம் வருடம் முதல் இருந்து வருகிறது. அவர்களுக்கு தாவா சொத்தைப் பொருத்து கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்ள முழு உரிமை உண்டு, தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குமூலம் தவறானதாகும். தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை.

3.4) தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் தந்தை வேலுச்சாமி 1965ம் வருடம் சரியான கிரையத்தொகைக்கு கிரையம் பெற்றுள்ளார். வேலுச்சாமிக்கு கிரையம் கொடுத்த ஜெயராமன் (எ) நானப்பன், அவருடைய சகோதரர்கள் மற்றும் தனபால் நாயுடு ஆகியோர் தாவா சொத்தை 1940ம் வருடம் ஒரு பதிவு பெற்ற கிரையப் பத்திரம் மூலம் கிரையம் பெற்றனர். மேலும், வேலுச்சாமி தாவா சொத்திற்கு பட்டா கோரி, திருச்சி, நில உடமை தாசில்தயிடம் மனு தாக்கல் செய்தபோது, முன் கிரையதாரர்களின் கிரைய பத்திரங்களையும் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தைப் பொருத்து வேலுச்சாமி பெயரில் வழங்கிய பட்டா செல்லாது என்று மைனர் இனாம் ஒழிப்பு தீர்ப்பாயம் முன்பு மேல்முறையீடு இனாம் சி.எம்.ஏ, 221/74 தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதன்பின், வாதி கோவில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, தாவா முன் வழக்கு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. தாவாசொத்தானது 1ம் பிரதிவாதியின் குடும்பத்தில் 1985ல் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினையில், 1ம் பிரதிவாதி பங்கிற்கு ஒதுக்கப்பட்டு, அன்றைய தேதி முதல் அனுபவிக்கப்பட்டு வருகிறது. வாதி கோவிலுக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நகர அளவையின்பொழுது ஏற்பட்ட தவறின் காரணமாக நகர அளவைப் பதிவேடுகளில் வாதி கோவில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. வாதி கோவில் நிர்வாக அலுவலர் தவறான உள்நோக்கம் கொண்டு இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். எனவே தாவா தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

4) <u>2, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட, எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்து தனக்கு சொந்தமானது என்று கூறி, ஏற்கனவே நீதிமன்றத்தில் நடைபெற்ற அ.எண்.244/2010 என்ற வழக்கில் வாதிட்டுள்ளார். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின்போதும், 1ம் பிரதிவாதி தனது சொத்து என வாதிட்டுள்ளார். இதை, 1ம் பிரதிவாதிதான் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் மட்டுமே தாவா சொத்து சம்பந்தமாக உரிமை பிரச்சனை ஏற்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இனி, வாதியும், 1ம் பிரதிவாதியும் அவரவர் உரிமையை நீதிமன்றத்தில் நிரூபித்துக்கொள்ள கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். இருப்பினும், தமிழக அரசை 2, 3, 4 பிரதிவாதிகளை தேவையில்லாமல் நீதிமன்றத்தில் வழக்கில் சேர்த்து வீண் கஷ்ட நஷ்டங்களை வாதி ஏற்படுத்தியுள்ளார். எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

5. <u>மேல்முறையீட்டுக்கான காரணங்கள்:</u>

5.1) விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் முரணானதாகும். விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் வெளிப்படையான பிழைகள் உள்ளன.

5.2) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை விசாரணை நீதிமன்றம் முறையாகப் பரிசீலிக்கவில்லை. வழக்குச் சொத்தானது 1 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட மற்றும் முழுமையான உரிமையாகும். செட்டில்மெண்ட் தாசில்தார் 1ம் பிரதிவாதிக்குச் சாதகமாக பட்டா வழங்கிய நிலையில், வாதிக்கு அந்தச் சொத்தில் உரிமையில்லை.

5.3) CMA No.221/1974 அனுமதிக்கப்பட்டதாக விசாரணை நீதிமன்றம் தவறாகக் கருதியுள்ளது. மாறாக, செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவுக்கெதிராக தொடரப்பட்ட CMA No.221/1974 என்ற வழக்கானது அந்த பிரதிவாதியான கோயில் ஒரு சரியான தரப்பினராக இல்லாத காரணத்தினால் அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வாதி தனது உரிமையை நிரூபிக்கவில்லை. கோயில் தரப்பில் அந்தச் சொத்தின் மீது எவ்வித உரிமையோ அல்லது சுவாதீனமோ இல்லை என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

5.4) 1ம் பிரதிவாதியும், அவருக்கு முன்னுரிமை பெற்றவர்களும் பிரிவு 30/1963 சட்டத்தின் வருகைக்கு முன்பிருந்தே நீண்ட காலமாக அந்த சொத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வந்துள்ளார். இது செட்டில்மெண்ட் தாசில்தாரால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதாலும், பிரிவு 30/1963 சட்டத்தின் கீழ் சார்பு நீதிமன்றத்தால் CMA தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வாதி முன்தீர்ப்புத் தடை மற்றும் முரண்தடை ஆகியவற்றால் தடை செய்யப்படுகிறார்.

5.5) செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவை உறுதி செய்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவைச் சரியாகப் புரிந்துகொள்ள விசாரணை நீதிமன்றம் தவறியுள்ளது. கோயிலுக்கு, சொத்தில் உரிமை இருப்பதாக விசாரணை நீதிமன்றம் தவறாக முடிவெடுத்துள்ளது. பிரதிவாதி சமர்ப்பித்த ஆவணங்கள் வாதிக்குச் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

5.6) வாதி தரப்பில் இனாம் உண்மை பதிவேடு அல்லது மூல உரிமைப் பத்திரங்கள் எவையும் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பில் அளிக்கப்பட்ட வாய்மொழிச் சாட்சியங்கள் வழக்கிற்கு வலு சேர்க்கவில்லை. மேலும், நிர்வாக அதிகாரி வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 1963–ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தின்படி, வாதியின் உரிமைகள் ஏற்கனவே காலாவதியாகிவிட்டன. வாதி தரப்பு சான்றாவணங்கள் 4 முதல் 6 உரிமையை நிலைநாட்டப் போதாது. செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவு தவறு என்பதை நிரூபிக்க வாதி கூடுதல் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவில்லை.

5.7) பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் 1 முதல் 7 முதல் பிரதிவாதியே அந்தச் சொத்தின் முழுமையான உரிமையாளர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. L.A.O.P.No.39/2021 தொடர்பான ஆவணங்களை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும். செட்டில்மெண்ட் தாசில்தாரின் விரிவான

காரணங்களையும், சார்பு நீதிமன்றம் அதை உறுதி செய்ததையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது.

5.8) சொத்து சுவாதீனத்தில் இல்லாத வாதிக்கு, சுவாதீனத்தை மீட்பதற்கான கோரிக்கை இல்லாமல் வெறும் விளம்புகை மட்டும் வழங்கியது சட்டப்படி தவறானது. 14.05.1940, 26.11.1990, 04.10.1900, 26.11.1910, 14.05.1940, 04.04.1904, 11.08.1893, 18.07.1990 வரையிலான காலக்கட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கிரயப் பத்திரங்களை விசாரணை நீதிமன்றம் கருத்தில்கொள்ளாதது தீர்ப்பை வலுவிழக்கச் செய்கிறது. எனவே, இந்த மேல்முறையீட்டை அனுமதித்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டும்.

6. <u>மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த இ.ம.எண்.2/2025, 3/2025 மற்றும் 4/2026 மனுக்களின் சுருக்கம் பின்வருமாறு :</u>

6.1) மனுதாரர் மேல்முறையீட்டு மனுவின் மேல்முறையீட்டாளர் ஆவார். அசல் வழக்கானது, தாவா சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மணப்பாறை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.158/2021 ஆக கோப்பிலெடுக்கப்பட்டு, 27.01.2025 அன்று வழக்கில் தீர்ப்புரை பகரப்பட்டுள்ளது. தாவாசொத்தானது மனுதாரருக்குச்

சொந்தமானது. அந்த தீர்ப்புக்கெதிராக இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2) இனாம் ஒழிப்புச் சட்டம் 30/1963–ன் கீழ் மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டு, அது இறுதி நிலையை எட்டியுள்ளது. நல்லாண்டவர் தேவஸ்தானத்தால் தொடரப்பட்ட C.M.A.No. 221/1974 தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்குச் சொத்தை மனுதாரரே முழுமையான உரிமையுடன் அனுபவித்து வருகிறார். சுவாதீனத்தில் வைத்துள்ளார். இனாம் ஒழிப்புச் சட்டம் 30/1963–ன் கீழ் மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டு, அது இறுதி நிலையை எட்டியுள்ளது. நல்லாண்டவர் தேவஸ்தானத்தால் தொடரப்பட்ட Inam C.M.A.No.221/1974 தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும், செட்டில்மென்ட் தாசில்தாருக்கு எதிரான மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டதாக விசாரணை நீதிமன்றம் தவறாகக் கருதியுள்ளது.

6.3) இந்த மனுதாரர் நீண்ட காலமாகத் தடையற்ற சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மனுதாரருக்கு முன் உரிமை பெற்றவர்களும் இந்தச் சொத்தை அனுபவித்து வந்துள்ளனர். செட்டில்மென்ட் தாசில்தார், 100 ஆண்டுகளுக்கு முந்தைய கிரயப் பத்திரங்களைச் சான்றாகக் கொண்டுள்ளார். தாவா சொத்தானது பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நபர்களால் வாங்கப்பட்டது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு அசல் வழக்கை நிரூபிப்பதற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில்

தாக்கல் செய்யாமல் விடுபட்டு விட்டதாகவும், ஆனால், மேற்படி ஆவணங்கள் மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு வழக்குகளும் கூட்டாக விசாரணை செய்யப்படாததால் தற்போது மனுதாரரிடம் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாத காரணத்தினால், மேற்படி ஆவணங்களின் நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் அ.வ.எண். 229/2022 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது இந்த மேல்முறையீட்டு வழக்குடன் மேல்முறையீட்டு வழக்கு எண்.67/2025 ம் சேர்த்து விசாரிக்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி காரணங்களால் மேற்படி ஆவணங்கள் மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாலும், அசல் வழக்கு எண்.158/2021 ல் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்வதனால் அவற்றை கூடுதல் ஆதாரங்களாக ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே மனுக்களை அனுமதிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

7. <u>இ.ம.எண்.2/2025, 3/2025 மற்றும் 4/2026 எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களானது தள்ளுபடி செய்யத்தக்கது. மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தைப்பெற அவருக்கு உரிமையில்லை. மேல்முறையீட்டு வழக்கில் மேற்படி மனுக்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவொரு முறையான

காரணங்களும் இல்லை. மேற்படி ஆவணங்களை மனுதாரர் முன்னரே தாக்கல் செய்யாதது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தையே காட்டுகிறது. மனுதாரர் ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை சான்றிட்ட நகல்களாக தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், இந்த எதிர்மனுதாரர் ஒரு திருக்கோயில் என்றும், மேற்படி கோவிலின் நலன்கள் நீதிமன்றங்களால் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். எனவே மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

8) <u>**விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வனைந்த எழுவினாக்கள்:**</u>

1. வாதி கோரியவாறு வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
2. வாதி கோரியவாறு வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3. வாதி பெறத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

[

9) விசாரணை நீதிமன்றத்தில், வாதி தரப்பில் வாதி தரப்பில் செயல் அலுவலர் புனிதா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி V.M.S.V. போஸ் என்பவர், பி.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) **<u>இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனைகள்</u>**:

1) தாவாசொத்து 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுருவுக்கு பாத்தியப்பட்டதா?

2) இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், உரிமைமூலம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்தாது என்பது சரியா?

3) 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுரு(Idol) அசல் வழக்கில் கோரியபடி, விளம்புகை பரிகாரம் வழங்கத்தக்கதா?

4) 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுரு(Idol) கோரியபடி, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

5) மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில், இ.ம.எண்கள். 2/2025, 3/2025 மற்றும் 4/2026 ஆகிய இடைக்கால மனுக்களுடன், தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதா?

6) இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

7) விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மாற்றியமைக்கத்தக்கதா?

8) வேறு பரிகாரம் என்ன?

11) மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கில் வாதி. 2,3,4

எதிர்மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார். இந்த மேல்முறையீட்டில், விவாதிக்க வசதியாக இருக்கும் பொருட்டு, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களின் தகுதிநிலையே, இந்த மேல்முறையீட்டிலும் எடுத்தாளப்படுகிறது.

12) **இருதரப்பு வாதவுரைகள்:**

மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அசல் வழக்கின் எதிர்வழக்குரையிலும், மேல்முறையீட்டில் உள்ள காரணக்குறிப்பேட்டில் உள்ள விவரங்களையே விவரித்துக் கூறி, விசாரணை நீதிமன்றம் செட்டில்மெண்ட் தாசில்தார் மற்றும் இனாம் ஒழிப்பு தீர்ப்பாயம் ஆகியவை பிறப்பித்த உத்தரவை முறையாக பரிசீலிக்கவில்லை என்றும், மேலும், வாதி கோயிலுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லையென்றும், இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இறுதியானது என்றும், காலவரையறையைப் பொறுத்து வாதியை நிரந்தரமான இளவராகக் கருதமுடியாது என்றும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதியின் கோரிக்கை காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதி திருவுரு தாக்கல் செய்த ஆவணங்கள் உரிமை மூலத்தை ஏற்படுத்தாது என்றும், மேலும், வாதி சுவாதீன மீட்பு பரிகாரம் கோரவில்லையென்றும், மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த இ.ம.எண்.2/2025, 3/2025 மற்றும் 4/2026 மனுக்களுடன் இணைக்கப்பட்ட

ஆவணங்கள் மிக முக்கியமானவை என்றும், அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், எனவே, மேற்படி மனுக்களையும் இந்த மேல்முறையீட்டையும் அனுமதிக்க வேண்டுமென்றும், அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார். இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி, எழுத்துப்பூர்வ வாதவுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது..

13) 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், விசாரணை நீதிமன்றம் வழக்கை சரியான முறையில் பரிசீலித்துள்ளது என்றும், சட்டம் 30/1963ல் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் உரிமைமூலம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றங்கள் சொத்தின் உரிமை மூலத்தை தீர்மானிப்பதற்கு தடையாக அமையாது என்றும், இந்து அறநிலையத்துறை சட்டம் பிரிவு 109–ன் கீழ் வாதி திருவுரு, இதுபோன்ற வழக்கை தாக்கல் செய்வதில் காலவரையறை கிடையாது எனறும், 1ம் பிரதிவாதி எதிரிடை அனுபவ பாத்தியம் கோர முடியாது என்றும், ஏற்கனவே சொத்து கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு வைப்பீடு செய்யப்பட்டுள்ளதால், சுவாதீன மீட்பு பரிகாரம் கோரப்படவில்லை என்றும், விசாரணை நீதிமன்றம் சரியான முறையில் ஆவணங்களை பரிசீலித்து, சரியான முறையில் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், எனவே, இந்த மேல்முறையீட்டு வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி இடைக்கால மனுக்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவொரு முறையான காரணங்களும் கூறப்படவில்லையென்றும், எனவே,

மேற்படி மனுக்களையும், இந்த மேல்முறையீட்டையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார். மேலும், இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி எழுத்துப்பூர்வ வாதவுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

15) **<u>பிரச்சினை எண்.5:</u>**

16) மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில், இ.ம.எண்கள். 2/2025, 3/2025 மற்றும் 4/2026 ஆகிய இடைக்கால மனுக்களில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதா? என்பது தொடர்பாக முதலில் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

17) மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு அசல் வழக்கை நிரூபிப்பதற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்யாமல் விடுபட்டு விட்டதாகவும், ஆனால், மேற்படி ஆவணங்கள் மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு வழக்குகளும் கூட்டாக விசாரணை செய்யப்படாததால் தற்போது மனுதாரரிடம் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாத காரணத்தினால், மேற்படி ஆவணங்களின் நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, மனுக்களை அனுமதிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

18) 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில், மேல்முறையீட்டு வழக்கில் மேற்படி மனுக்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவொரு முறையான காரணங்களும் இல்லையென்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் முன்னரே தாக்கல் செய்யாதது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தையே காட்டுவதாகவும், மனுதாரர் ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

19) இ.ம.எண்.2/2025 மனு 25.10.2025 அன்று மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனுடன் CMA No.221/1974ல் 27.09.1977 அன்று பிறப்பித்த உத்தரவின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.3/2025 மனுவானது இதே மனுதாரர் தரப்பில், 10.11.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனுடன் மொத்தம் பல்வேறு தேதியிட்ட 10 கிரையப்பத்திரங்களின் ஜெராக்ஸ் நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இ.ம.எண்.4/2026 மனுவானது இதே மனுதாரர் தரப்பில் 04.02.2026 அன்று 18.06.1965 தேதிய கிரையப்பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர், 16.02.2026 அன்று ஒரு குறிப்பாணை மூலம் இ.ம.எண்.3/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஜெராக்ஸ் நகல்களின் சான்றிட்ட நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

20) பொதுவாக, ஜெராக்ஸ் நகல்களை ஒரு உரிமையியல் வழக்கில், சார்நிலை சாட்சியமாக(Secondary Evidence) கருத முடியாது. மேலும், அசல் வழக்கானது 2013 ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஆவணங்களை, இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் ஏன்? தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை? என்பதற்கும், மனுதாரர்கள்/ மேல்முறையீட்டாளர்கள்/ 1ம் பிரதிவாதி தரப்பில் உரிய விளக்கம் இல்லை. விசாரணை நீதிமன்றத்தில் அவர்களது தரப்பில் பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே மனுதாரர்கள் தரப்பில் உரிய கவனத்துடன் செயல்பட்டும் தனக்கு மேற்படி ஆவணங்கள் கிடைக்கவில்லையென்பதை நிரூபிக்கவில்லை. மேற்படி கூடுதல் ஆவணங்களை, ஒன்றன்பின்ஒன்றாக பல்வேறு தேதிகளில், இந்த மேல்முறையீட்டு வழக்கின் இறுதியில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மேல்முறையீட்டு வழக்கை இழுத்தடிக்கும் நோக்கிலேயே, மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில், அவ்வாறு செயல்பட்டுள்ளது தெரிகிறது. எனவே, மனுதாரர் உரிய கவனத்துடனும் நடந்துகொள்ளவில்லையென்றும், கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள, உரிய காரணம் இந்த மனுக்களில் கூறப்படவில்லை என்றும், எனவே, இந்த மூன்று மனுக்களும் அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் முடிவு செய்யப்படுகிறது. எனவே, இ.ம.எண்கள். 2/2025, 3/2025 மற்றும் 4/2026 ஆகிய மூன்று

இடைக்கால மனுக்களும், செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யத்தக்கதென **பிரச்சினை எண்.5** க்கு முடிவு செய்யப்படுகிறது.

21) **<u>பிரச்சனை எண்கள் 1 முதல் 4 மற்றும் 6 ,7 :</u>**

மேற்படி ஆறு பிரச்சனைகளிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவற்றுக்கு பொதுவாக விடையளிக்க வேண்டியுள்ளது.

22) 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுரு சார்பில் தாவாசொத்து, வாதி கோவிலுக்கு மானியமாக வழங்கப்பட்டு, T.D.No.2030 என்று இனாம் தூய பதிவேட்டில் உள்ளது. 1ம் பிரதிவாதி தனது முன்னோர்கள் தாவா சொத்தை வாங்கியதாகவும், தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் தீர்வு அதிகாரிகளால் பட்டா வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகளின் முடிவானது தாவாசொத்தின் உரிமைமூலத்தை உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்வதை கட்டுப்படுத்தாது என்றும் வாதிடப்பட்டது.

23) மாறாக, மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில், 1ம் பிரதிவாதியும், அவருக்கு முன்னுரிமை பெற்றவர்களும் பிரிவு 30/1963 சட்டத்தின் வருகைக்கு முன்பிருந்தே நீண்ட காலமாக அந்த சொத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வந்துள்ளார் என்றும், இது செட்டில்மெண்ட் தாசில்தாரால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதாலும், பிரிவு 30/1963 சட்டத்தின்

கீழ் சார்பு நீதிமன்றத்தால் CMA தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி முன்தீர்ப்புத் தடை மற்றும் முரண்தடை ஆகியவற்றால் தடை செய்யப்படுவதாகவும் வாதிடப்பட்டது.

24) இதுபோன்ற சூழ்நிலையில் பின்வரும் தீர்வு முடிவுகளில், கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*1) In **Sir – La – Sri Sivaprakasa Pandara Sannadhi Avargal Vs. Smt.T.Parvathi Ammal & Ors** on 20.02.1996 i in C.A.No.5141 of 1993, with Contempt Petition No.103 of 1995, **reported in 1998-2-L.W.188 wherein the Hon'ble Supreme Court of India** has held as follows:*

" This Court in a recent decision in R.Manikanaicker V. E.Elumalainaicker. 1995(4) SCC 155 = 1995 – 1 -L.W.731 has clearly held that the Civil Court's jurisdiction to adjudicate title of the parties, is not barred by virtue of the parties, is not barred by virtue of the provisions of the said Act. This is a direct decision of this Court on the provisions of the Act with which we are concerned in the present case."

*2) In **Srinivasan Vs. S Madhyarjuneswaraswami, Pattavaithalai,, Tiruchirappalli district rep. by its Executive Officer & Ors** on 30.04.1988, in S.A.No.51088 and 1389 of 1980, **reported in 1998-2-L.W.189 wherein the Full Bench of Hon'ble Madras High Court** has held as follows:*

"We answer the question referred to the Full Bench in the negative, by holding that the jurisdiction of the civil court to entertain a suit for declaration of title and

injunction is not barred, by reason of the grant of patta under the provisions of Tamil Nadu Act 30 of 1963."

25) மேற்படி தீர்வு முடிவுகளிலிருந்து, செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவு, ரயத்துவாரி பட்டாவை வழங்குவது அல்லது மறுப்பது என்ற நோக்கத்திற்காக மட்டுமே மறைமுகமாக வழங்கப்படும், ஒரு துணை முடிவாகவே இருக்கும் என்பதும், அவர் தனக்கு முன் வைக்கப்படும் ஆதாரங்களின் அடிப்படையில், பட்டாவை வழங்குவது அல்லது மறுப்பது மட்டுமே அவரது அதிகார வரம்பிற்கும் உட்பட்டது என்பதும், ஆனால், ரயத்துவாரி பட்டா மறுக்கப்பட்ட பின்னரும் கூட, நிலத்தின் உண்மையான தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும் பட்சத்தில், உரிமையியல் நீதிமன்றம் அது குறித்து பரிசீலித்து தரப்பினர்களின் உரிமை தொடர்பாக விளம்புகை செய்ய உரிமையுள்ளது என்பது தெரிகிறது. எனவே, மேற்படி தீர்வு முடிவுகளின்படி, சட்டம் 30/63ன் கீழ் செட்டில்மெண்ட் தாசில்தார் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருந்தாலும், தாவாசொத்தில் வாதி திருவுரு தனது உரிமையை விளம்புகை பரிகாரம் கோரிய, இதுபோன்ற வழக்கை தீர்மானிக்க, உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதென முடிவு செய்யப்படுகிறது. எனவே, இதுதொடர்பாக மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் எழுப்பப்பட்ட வாதம் ஏற்புடையதல்ல என **பிரச்சினை எண். 2–**க்கு முடிவு செய்யப்படுகிறது.

26) தாவாசொத்து 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுருவுக்கு பாத்தியப்பட்டதா? என்பதை வாதி தரப்பில் நிரூபித்துள்ளார்களா? என்பதையும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி திருவுரு(Idol) அசல் வழக்கில் கோரியபடி, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கத்தக்கதா? என்பதையும் ஒருசேர பரிசீலிக்க வேண்டியுள்ளது.

27) வாதி திருவுரு தாக்கல் செய்த வழக்குரையிலும், வா.சா.1ன் சாட்சியத்திலும், தாவாசொத்து, வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், வருவாய் ஆவணங்களில் தாவாசொத்து வாதி கோவிலின் பெயரில் உள்ளதாகவும், டவுன் சர்வே ரிஜிஸ்டரில் தாவா சொத்து வாதி திருவுருவின் பெயரில் உள்ளதாகவும், தாவாசொத்து, வாதி திருவுருவுக்கு மானியமாக வழங்கப்பட்டு, T.D.No.2030 என்று இனாம் தூய பதிவேட்டில் உள்ளதாகவும், 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆர்ஜிதம் செய்ததாகவும், எனவே, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

28) வா.சா.ஆ.7 ஆக விசாரணை நீதிமன்றத்தில், வாதி திருவுரு தரப்பில், செவலூர் கிராம பல்வேறு சர்வே எண்கள் தொடர்பான இனாம் தூய பதிவேடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், கலம் 2ல் தேவதாயம் என்றும், கலம் 5ல் அந்த சர்வே எண்களின் விஸ்தீரணங்களும், கலம் 8ல் – For the support of Agasteswaraswamy Pagoda at Kovil Maidu Mazarat, Kannudayanpatti. It is well kept

up. It is a stone built Pagoda, கலம் 10 ல் – **நிரந்தரம் (Permanent)** என்றும், கலம் 11 ல் – இனாம் யாரால் எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்பது தொடர்பாக, not known என்றும், கலம் 13 ல் – Name of Original Granter என்பதில் அகஸ்தீஸ்வரர் சுவாமி பகோடா என்றும், கலம் 14 ல் – In 1213 அகஸ்தீஸ்வரசுவாமி என்றும், கலம் 15 ல் சர்வே பதிவுகளில் உள்ள பெயர், தற்போதைய நபருக்கான உறவு என்பதில் In 1239 அகஸ்தீஸ்வரசுவாமி என்றும். In 1268 கோவில்மெய்டு அகஸ்தீஸ்வரசுவாமி என்றும், கலம் 16 முதல் 20 வரையிலான கலத்தில் Kovilmaidu Mazara of Kannudayanpatti, (1) அகஸ்தீஸ்வரசுவாமி (2) மந்திரபுஷ்பம் சேவை நரசிம்ம ஐயர், (3) கர்ணம் சேவை ராமலிங்கம் பூஜை சேவை சாமி அய்யங்கார், (4) ஜோதி அல்லது வருவாய் சேகரிப்பு சேவை , (5) நிரானி சேவை நாச்சிநல்லான், கலம் 21 ல் – Although in the Huzur account of Fi 1213 the whole of this Inam is entered in the name of the Pagoda only it appears from the Karnum's fysal account of that fasly, that the portions of it forming the service Inams, had been enjoyed even before Fi 1213 by the several servants with the exception, however of the mantrapushpam service Inam held by No.2 which was allotted to him for the service under Collr's order of 14th November 1831, during Government management of the Devasthanam as a subsequent Inam. To be confirmed free in one T.D. so long as the Pagoda exists and the several services are rendered என்றும், நாள் 11 ஜுன் 64 என்றும், கலம் 22 ல் - T.D.No.2030 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

29) எனவே, இந்த தாவாசொத்து அகஸ்தீஸ்வரர் சுவாமி கோவிலுக்கு மந்திரபுஷ்பம் சேவையை செய்ய வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட சொத்து

என்பதையும், வாதி திருவுருவுக்கு தாவாசொத்து மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும், வா.சா.ஆ.7 இனாம் தூய பதிவேட்டில் தெளிவாகக் காணமுடிகிறது. மேலும், கோயிலிலும் கர்ணம் சர்வீஸ் இருந்துள்ளது என்பது எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டது. அதிலுள்ள கர்ணம் சர்வீஸ் என்பது கிராம முன்சிப் சர்வீஸ்க்காக வழங்கப்பட்ட நிலம் என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

30) மேலும், பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

"நெடுஞ்சாலை துறையினரால் சர்வே எண். 606/14ல் 589 சதுர மீட்டரை 2010–ல் ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் சரிதான். அப்போதுதான் நான் மணப்பாறை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.244/2010 என்ற வழக்கினை தாக்கல் செய்து கோவிலாரை எதிர்த்து விளம்புகை பாரிகாம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பட்டா சம்மந்தமான மேல்முறையீடு மாவட்ட வருவாய் அலுவலகத்தில் நிலுவையில் இருந்ததாலும், நான் அ.வ.எண்.244/2010 வழக்க தாக்கல் செய்து நிலுவையில் இருந்ததால் ஆர்ஜித அதிகாரிகள் நிலத்திற்குரிய பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தார்கள் என்றால் சரிதான். அது சம்மந்தப்பட்டதுதான் LAOP 39/2021 என்ற வழக்கு ஆகும். அது நிலுவையில்தான் உள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் கோவிலார் தாக்கல் செய்த மேல்முறையீட்டை தள்ளுபடி

செய்து, சொத்திற்கான பட்டாவை எனக்கு வழங்கிவிட்டதால் நான் தாக்கல் செய்த அ.வ.எண்.244/2010 வழக்கை மேல்நடத்தாமல் விட்டுவிட்டேன். அ.வ.எண்.244/2010 வழக்கு 13.07.2012 தாவா தள்ளுபடியாகி விட்டதால் கோவிலார் தாவா சொத்தில் தங்களுக்குள்ள உரிமையை விளம்புகை, இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு பாத்தியம் கோருவது இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டா மற்றும் வருவாய் துறையினரால் எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில்தான் என்றால் சரிதான். இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட பட்டா மற்றும் வருவாய்துறையினரால் வழங்கப்பட்ட பட்டா உரிமையியல் நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்றாலும் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் சொத்தின் உரிமை சம்மந்தப்பட்ட பிரச்சிணையை தீர்வு காண முடியும் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது."

31) மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தாவா சொத்தில், நீண்ட நெடுங்காலமாக இந்த சொத்தின் சுவாதீனத்தில் உள்ளதாகவும், வாதி/திருவுருவின் கோரிக்கை காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டுமென்று ஒரு வாதம் மேற்கொள்ளப்பட்டது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டம் பிரிவு 109–ன் படி, வாதி/ திருவுரு மேற்படி சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்ட Religious Institution என்பதால், மேற்படி H.R. & C.E.Act

சட்டப்பிரிவு 109–ன் படி, அவரது கோரிக்கை தாவாசொத்தைப்பொறுத்து காலவரையறையால் பாதிக்கப்படவில்லையென்றும், எனவே, சட்டப்பிரிவு 109–ன் படி, வாதி திருவுருவுக்கெதிராக, 1ம் பிரதிவாதி, எதிரிடை அனுபவபாத்திய உரிமை கோர முடியாது என்று முடிவு செய்யப்படுகிறது.

32) விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்புரை பத்திகள் 19,20 ஆகியவற்றில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டம் பிரிவு 44ன் படி, வா.சா.ஆ.7ல் கண்ட பதிவுகளின்படி, வாதி திருவுருவுக்கு மேற்படி சட்டப்பிரிவின்படியான அனுமானம்(Presumption) கிடைக்கத்தக்கது என்பதை, மேற்படி பத்திகளில் குறிப்பிடப்பட்ட SRI VARADARAJA PERUMAL TEMPLE VS. K. RAMACHANDRAN AND OTHERS reported in 1984 (1) MLJ 43 மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்வு முடிவுகளின் அடிப்படையில் முடிவு செய்துள்ளது சரியானதேயென முடிவு செய்யப்படுகிறது. மேலும், 1ம் பிரதிவாதி இதே சொத்தைப் பொறத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய, அ.வ.எண்.244/2010 வழக்கை மேல் நடத்தாமல் தள்ளுபடியாக விட்டுவிட்டார் என்பது வா.சா.ஆ.2 தீர்ப்பாணையிலிருந்து தெரிய வருகிறது. உண்மையில், தாவாசொத்தில் அவ்வாறு தனக்கு உரிமையிருப்பின், ஏன் வழக்கை மேல்நடத்தவில்லை என்பதற்கும், 1ம் பிரதிவாதி தரப்பில் உரிய விளக்கமில்லை.

33) மேலும், விசாரணை நீதிமன்றம், 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தந்தையின் முன்பாகஸ்தர்கள் அனுபவத்தில்தான் இந்த சொத்துக்கள் உள்ளதாக

கூறியிருந்தாலும், அதற்கான ஆவணங்களை குறியீடு செய்யவில்லையென்றும், அதேபோல், 1ம் பிரதிவாதியோ, அவரது முன்பாகஸ்தர்களோ, வாதி திருவுருவுக்கு மந்திரபூசைக்காக வா.சா.ஆ.7 ன்படி இனாமாக வழங்கப்பட்ட இருவார உரிமைகொண்ட மானிய நிலத்தை அனுபவிக்கும் வகையில் வாதி கோயிலுக்கு மேற்படி சேவையை செய்து வந்ததைக் காட்ட எந்தவித சாட்சியமும் முன்னிலைப்படுத்தவில்லையென்றும், எனவே, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், பிரதிவாதிகளுக்கு இந்த சொத்தில் உரிமைமூலம் ஏற்படவில்லையென்று முடிவு செய்துள்ளது சரியானதேயென முடிவு செய்யப்படுகிறது. எனவே, வா.சா.ஆ.7 ன்படி தாவாசொத்து வாதி திருவுருவுக்கு மந்திரபூசை சேவைக்காக வழங்கப்பட்ட இருவார உரிமை கொண்ட மானிய நிலம் என்பதால் வாதி திருவுருவுக்கு வழக்குரையில் கோரியபடி விளம்புகை பரிகாரம் வழங்கிய விசாரணை நீதிமன்றத்தின் முடிவு சரியானதேயென முடிவு செய்யப்படுகிறது.

34) மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் வாதி திருவுரு தாவாசொத்தின் சுவாதீனத்தில் இல்லையென்றும், எனவே, சுவாதீன மீட்பு பரிகாரம் கோராததால், வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு வாதம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், சொத்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதன் இழப்பீட்டுத்தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதை மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி எடுக்கக் கூடாதென நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சொத்து நிலஆர்ஜிதம் செய்யப்பட்டு, இழப்பீடு வைப்பீடு செய்யப்பட்டுள்ளதால், சுவாதீன மீட்பு பரிகாரம் கோராதது, வாதி திருவுருவின் வழக்கை பாதிக்கவில்லையென்றும், எனவே, வாதி திருவுரு கோரியவாறு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிய, விசாரணைநீதிமன்றத்தின் முடிவும் சரியானதேயென முடிவு செய்யப்படுகிறது. எனவே, விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானவைதான் என்றும், அவற்றில், குறுக்கிடுவதற்கு ஏற்கத்தக்க காரணங்கள் இல்லையென்றும், எனவே, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், **பிரச்சினை எண்கள் 1 முதல் 4,6,7–க்கு** முடிவு செய்யப்படுகிறது.

35) <u>பிரச்சினை எண். 8:</u>

இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி இந்த மேல்முறையீட்டு வழக்கின் தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென **பிரச்சினை எண்.8–க்கு** முடிவு செய்யப்படுகிறது.

36) **முடிவாக,**

1) மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த, கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக் கோரிய, இ.ம.எண்கள் 2/2025, 3/2025, 4/2026 ஆகிய மனுக்கள் செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றம் அ.வ.எண்.158/2021 வழக்கில், 27.01.2025 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

3) இந்த மேல்முறையீட்டு வழக்கின் தரப்பினர்கள், அவரவர் செலவுத்தொகையை, அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.01 14:03:51 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

<u>**நகல்**</u>:
சார்பு நீதிமன்றம், மணப்பாறை.